செய்தி வெளியீடு எண் : 1491 நாள் : 27.07.2023

## செய்தி வெளியீடு

## திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற வேளாண் சங்கமம்– 2023 விழாவில் விவசாயிகளுக்கு 50,000 கூடுதல் இலவச விவசாய மின் இணைப்புகள் வழங்கும் திட்டம் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (27.07.2023) வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற வேளாண் சங்கமம்–2023 விழாவில், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால் விவசாயிகளுக்கு 50,000 கூடுதல் இலவச விவசாய மின் இணைப்புகள் வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்து, 12 விவசாயிகளுக்கு புதிய மின் இணைப்புகளுக்கான ஆணைகளை வழங்கினார்.

மாநிலத்தின் விவசாய உற்பத்தியினை பெருக்கி, விவசாயிகளின் நலனை மேம்படுத்தும் நோக்குடன் ஒரு இலட்சம் புதிய விவசாய மின் இணைப்புகள் வழங்கப்படும் என்று எரிசக்தி துறையின் 2021–2022 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டு, அதன்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 23.09.2021 அன்று சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகக் கூட்ட அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு மின்சார வாரியம், மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகம், மின் தொடரமைப்புக் கழகம் ஆகியவற்றின் சார்பில் விவசாயிகளுக்கு ஒரு இலட்சம் விவசாய மின் இணைப்புகள் வழங்கும்

திட்டம் தொடங்கி வைக்கப்பட்டு, ஒரு இலட்சம் விவசாய மின் இணைப்புகள் வழங்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, எரிசக்தித் துறையின் 2022–23ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில், கூடுதலாக, 50,000 எண்ணிக்கையில் புதிய விவசாய இலவச மின் இணைப்புகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 11.11.2022 அன்று கரூர் மாவட்டம், அரவக்குறிச்சியில் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற விழாவில், விவசாயிகளுக்கு 50,000 கூடுதல் மின் இணைப்புகள் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைக்கப்பட்டு, கூடுதலாக 50,000 இலவச விவசாய மின் இணைப்புகள் வழங்கப்பட்டது.

விவசாயிகளின் நலனை எப்பொழுதுமே முதன்மையாக கருதக்கூடிய மக்களுக்கான இவ்வரசு, கூடுதலாக 50,000 புதிய இலவச விவசாய மின் இணைப்புகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று 2023–24ஆம் ஆண்டு எரிசக்தித் துறை மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பிற்கிணங்க, விவசாயிகளுக்கு 50,000 கூடுதல் இலவச விவசாய மின் இணைப்புகள் வழங்கும் திட்டத்தை திருச்சிராப்பள்ளியில் இன்று நடைபெற்ற வேளாண் சங்கமம் விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்து, 12 விவசாயிகளுக்கு புதிய மின் இணைப்புகளுக்கான ஆணைகளை வழங்கினார்.

இவ்விழாவில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என். நேரு, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு, மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர் திரு.எம். ஆர்.கே.பன்னீர் செல்வம், மாண்புமிகு நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. எஸ்.எஸ்.சிவசங்கர், மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்புப் பிரதிநிதி திரு.ஏ.கே.எஸ். விஜயன், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் திரு. உ.மதிவாணன், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மேயர் திரு. மு.அன்பழகன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. எஸ்.இனிகோ இருதயராஜ், திரு. அ.சௌந்தரபாண்டியன், திரு. செ. ஸ்டாலின் குமார், திரு. ந. தியாகராஜன், திரு. எம்.பழனியாண்டி, திரு. பி.அப்துல் சமது மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள்,தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., எரிசக்தித்துறை முதன்மைச் செயலாளர் மரு. (திருமதி) பீலா ராஜேஷ், இ.ஆ.ப., வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் திரு. சி.சமயமூர்த்தி, இ.ஆ.ப., வேளாண்மைத்துறை ஆணையர் முனைவர் இல. சுப்பிரமணியன், இ.ஆ.ப., தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை

இயக்குநர் டாக்டர் ஆர்.பிருந்தா தேவி, இ.ஆ.ப., திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மா.பிரதீப் குமார், இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

***************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in